# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காட்பாடி,

முன்னிலை: திரு.Tr. S.K.P.DILIPBABU., M.A.M.L.,
நீதித்துறை நடுவர்,
காட்பாடி,
2026 வது வருடம் மார்ச் திங்கள் 23 ஆம் நாள் திங்கட்கிழமை

**குற்றப்பல்வகை மனு எண்.188/2026**

சதாசிவம், த/பெ முனுசாமி ... மனுதாரர்

//எதிராக//

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
மேல்பாடி காவல் நிலையம்,
குற்ற எண்.56/2023
PRC 174/2025 ... எதிர்மனுதாரர்

இம்மனுவானது 23.03.2026 இன்று என் முன்பாக விசாரணைக்கு வந்து மனுதாரர்/கோருரிமையாளர் தரப்பில் திரு.N.கார்த்திக் அவர்கள் முன்னிலையாகியும், அரசுத்தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், அரசுத் தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்து மூலமான ஆட்சேபனையை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

1.இருபுறமும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வழக்கில் கைப்பற்றப்பட்ட டிரய்லரின் பதிவு எண் TN 23 AK 2265 என்ற டிரெய்லர் மேல்பாடி காவல் நிலையத்தினரால் குற்ற எண்.56/2023 என்ற வழக்கில் கைப்பற்றப்பட்டு, இதச பிரிவுகள் U/S 379, 430 IPC ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ள நபர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், பின்பு காவல்துறையினரால் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு சி.பி.நம்பர்.112/2024 என எடுக்கப்பட்டு, தற்போது காவல் நிலைய பொறுப்பில் இருப்பதாகவும் TN 23 AK 2265 என்ற டிரய்லரை பொறுத்து நீதிமன்றம் விதிக்கும் சகல நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட தயாராக இருப்பதாகவும், மேற்படி வாகனத்தை நீதிமன்றம் கோரும் போது, தவறாமல் நீதிமன்றத்தில் ஒப்படைக்க தயாராக இருப்பதாகவும், தனக்கு சொந்தமான டிரய்லரை இடைக்காலமாக தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வாதிடப்பட்டது.

2. மேற்படி வாகனத்தின் உரிமையாளரான சதாசிவம் A2 ஆன டிராக்டரின் மற்றும் டிரய்லரை திரும்ப பெற மனுதாக்கல் செய்தபோது டிராக்டரின் பதிவு எண் TN 23 AK 2653 என்றும் டிரய்லரின் பதிவு எண் TN 23 AK 2265 என்றும் தாக்கல் செய்துள்ளார். மேற்படி வாகனத்தை கைப்பற்றும் போது டிரய்லரில் பதிவு எண் இல்லாமலும் டிராக்டரில் TN 23 AK 2265 என்ற பதிவு எண் எழுத்தால் எழுதி இருந்ததாலும் அவ்வாறே முதல் தகவல் அறிக்கை பதிவு இறக்கம் செய்யப்பட்டது.

கைப்பற்றுதல் மகஜர் மற்றும் படிவம் 91 பதிவு செய்யப்பட்டது. தற்போது வாகனத்தின் பதிவு சான்றை சரிபார்த்ததில் டிராக்டரின் பதிவு எண் TN 23 AK 2253 டிரய்லரின் பதிவு எண் TN 23 AK 2265 என்றும் தெரிய வருகிறது என்பதை தங்கள் சமூகம் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன். இந்நிலையில் இந்நீதிமன்றத்தில் கைப்பற்றுதல் மகஜர் தாக்கல் செய்துள்ள படிவம் 91லும் டிராக்டரின் பதிவு எண் TN 23 AK 2265 என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது.

3. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அரசு தரப்பில் கூறியுள்ள TN 23 AK 2265 என்ற டிரய்லர் மனுதாரருக்கு சொந்தமானது என்பதை கருத்தில் கொண்டும், மனுதாரர் நீதிமன்றம் விதிக்கும் சகல நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுவதாக கூறியதை கருத்தில் கொண்டும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் Crl.RC.No.265 of 2025, தேதி 25.04.2025 ன் படி இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது.

## <u>நிபந்தனைகள்</u>

1)இவ்வழக்கு சொத்தான மதிப்பான ரூ. 50,000 /–த்திற்கு ஒரு பிணையதாரர் ஆறு மாத காலத்திற்குள் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் உரிய முகவரி ஆவணங்களுடன் பார்ம் எண்.46–யை இணைக்கவேண்டுமென்றும், பிணை முறிப்பத்திரத்தை எழுதி, நிரந்தர முகவரி ஆவணத்துடன் இந்நீதிமன்றத்தில் சமர்பிக்கவேண்டும் என்றும்,

2)வழக்குத் சொத்தின் முப்பரிமாண புகைப்படம் மற்றும் இந்திய சாட்சிய சட்டம் 65(B) சான்றிதழ் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

3) வழக்குச் சொத்திற்கு பஞ்சநாமா தயார் செய்து சமர்ப்பிக்க வேண்டும்.*

4)மேற்படி சொத்தை விற்கவோ, அடமானம் வைக்கவோ, சொரூப மாற்றம் செய்யவோ கூடாது. நீதிமன்றம் கோரும் பட்சத்தில் தவறாமல் இந்நீதிமன்றம் முன்பு ஆஜர் செய்ய வேண்டும்.

5) TN 23 AK 2265 என்ற டிரய்லரின் Original RC புத்தகத்தை சமர்பித்து நகலுடன் ஒப்பிட்டு திரும்ப பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 23.03.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU

Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.